


# சர்வதேச புள்ளிவிபர தினம்

முதன் முறையாக சர்வதேச புள்ளிவிபர தினம் வெற்றிகரமாக 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி உலகளாவிய ரீதியாக நினைவு கூறப்படுகின்றது. இத்தினமானது ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நினைவு கூறப்படுகின்றது. 2010ஆம் ஆண்டில் 130 இற்கும் மேற்பட்ட நாடுகளிலும், சர்வதேச அல்லது பிராந்திய அமைப்புகளிலும் நினைவு கூறப்பட்டது. சர்வதேச புள்ளிவிபர தினத்தை தேசிய புள்ளிவிபர ஆணையகமே பிரகடனம் செய்தது.

ஆண்டு முழுவதும் புள்ளிவிபர வல்லுநர்களால் மேற்கொள்ளப்படும் முக்கியமான பணிகள் குறித்து பொது விழிப்புணர்வுகளை வலுவூட்டச் செய்வதற்கே சர்வதேச புள்ளிவிபர தினம் கொண்டாடப்படுகிறது. நேர்த்தியான, சரியான நேரத்தில் மற்றும் ஒப்பிடக் கூடிய தரவுகளை சேகரித்துக் கொள்வதன் மூலம், உலகளாவிய ரீதியில் அமைந்துள்ள தேசிய புள்ளிவிபர அலுவலகங்களினால் ஏழைகள், பாதிப்புக்குள்ளானவர்களின் வாழ்கையை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் உட்பட பலவிதமான தேசிய மற்றும் சர்வதேச நடவடிக்கைககளை ஆதரிப்பதுடன் கவனத்திலும் கொள்ளப்படுகின்றன.

தற்போது எங்கள் சமூகங்களிலும், அரசாங்கங்களிலும் அதிகாரப்பூர்வ புள்ளி விபரங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்போது தேசிய, பிராந்திய மற்றும் உலக அளவில் உயர்தர புள்ளிவிபர தரவுகள் எளிதாக கிடைக்கப் பெறுகிறது. இவற்றைக் கொண்டே பொது விவாதங்கள், கொள்கை வகுத்தல் மற்றும் வணிக முடிவுகளில் வழக்கமாகப் பயன்படுத்தப் படுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு முக்கிய தேசிய நிறுவனமாக தேசிய புள்ளிவிபர அமைப்புகள் உருவாகி இயங்கி வருகின்றன.

முதல் புள்ளிவிபர ஆண்டான 2010இல் உலகளாவிய ரீதியிலும், நம் நாட்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினாலும் "அதிகாரப்பூர்வ புள்ளிவிபரங்களின் பல சாதனைகளைக் கொண்டாடுகிறது" என்ற கருப்பொருளில் இத்தினம் மேலும் இரண்டாவது புள்ளிவிபர ஆண்டான 2015இல் "சிறந்த வாழ்கைக்கு, சிறந்த தரவுகள்" எனும் கருப்பொருளில் நினைவு கூறப்பட்டது. அடுத்த சர்வதேச புள்ளிவிபர தினமானது 2020ஆம் ஆண்டில் மற்றுமொரு புதுவித கருப்பொருளில் நினைவுகூறப்படவுள்ளது.

*பா. சிம்ரா*